FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 154 Cr.P.C~~)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167274

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊத.க. பிரிவு** Year: ஆண்டு **2025** FIR No.: மு.த.அ. எண் **6/2025** Date: நாள் **19.08.2025**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: **1988 as amended by The Prevention** Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: **Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் **14.08.2025** Date to : நாள் வரை

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் **12.00 hrs** Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **19.08.2025** Time : நேரம் **0700 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - III** Time : நேரம் **0700 hrs**

4. Type of Information : Written/ Oral : **எழுத்துமூலமான புகார் மனு**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 60 கி.மீ. தென்மேற்கு.**

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி **VAO அலுவலகம், வாக்கூர் கிராமம், சிதம்பரம் தாலுக்கா,**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **E.தேர்விஜயன்** குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்

(b) Father's/ Husband's Name : **இளங்கோவன்** தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **50**

(d) Nationality : நாட்டினம் **இந்தியன்**

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் **----**

Place of Issue : வழங்கப்பட்ட இடம் **----**

(f) Occupation : தொழில் **எலக்ட்ரிகல் வேலை**

(g) Address : முகவரி **நெ.80, மேலத் தெரு, வாக்கூர் கிராமம், சிதம்பரம் வட்டம் கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.சதீஷ்குமார், VAO, வாக்கூர் கிராமம், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.
2.ரமேஷ், கிராம உதவியாளர், வாக்கூர் கிராமம், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary).
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது :

நான் இன்று 19.08.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தின் அலுவலலில் இருந்தபோது, நிலையம் ஆஜர் ஆன கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, வாக்கூர் கிராமம், 80, மேலத்தெரு என்ற முகவரியைச் சேர்ந்த இளங்கோவன் என்பவரது மகன் திரு.E.தேர்விஜயன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான புகார்மனு ஒன்றினை கொடுத்துக்கொண்டார். அதன் விவரம் பின்வருமாறு : 19.08.2025, செவ்வாய், அனுப்புதல் E.தேர்விஜயன், வயது 50, த/பெ இளங்கோவன், 80,மேலத் தெரு, வாக்கூர் கிராமம், சிதம்பரம் தாலுக்கா,

(தொடர்ச்சி பக்கம் –3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.08.2025 at 09.20 hrs.

Name: பெயர் P. Arumugam
Rank: நிலை Inspector No. எண் .....
VAO Cuddalore

கடலூர் மாவட்டம். செல்: 9345183958. பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். ஐயா, வணக்கம், நான் கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, வாக்கூர் கிராமம், மேலத் தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரிகல் வேலை மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். எனது பாட்டி முத்துலட்சுமி பெயரில் தரகூர் கிராமத்தில் இருந்த 52 செண்ட் நிலத்தை எனது அண்ணன் வேல்முருகன் பெயரில் எழுதி வைத்திருந்தார். இந்த சொத்திற்கான பட்டா எனது அண்ணன் வேல்முருகன் பெயரில் இருந்து வருகிறது. அந்த நிலத்தை எனது அண்ணன் வேல்முருகனுக்கும், எனக்கும், என்னுடைய மற்றொரு அண்ணன் அருள்பிரகாசம் என்பவருக்கும் சேர்த்து மூன்று பாகமாக தலா 17.5 செண்ட் என்று பிரித்து, இதற்குண்டான பத்திர பதிவு சேத்தியாதோப்பு பத்திர பதிவு அலுவலகத்தில் 06.08.2025 ஆம் தேதி ஆவண எண். 1981/2025 மற்றும் 1982/2025 ஆக பதிவு செய்யப்பட்டது. அந்த பத்திர பதிவின்போது பட்டா பெயர் மாற்றத்திற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திவிட்டோம். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து வாக்கூர் VAO அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த VAO சதீஷ்குமார் அவர்களிடம் பத்திர பதிவு ஆவணங்களின் நகல்களை கொடுத்து, எனது மற்றும் எனது அண்ணன் அருள்பிரகாசம் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்குமாறு கேட்டேன். நான் கொடுத்த ஆவண நகல்களை VAO சதீஷ்குமார் அவர்கள் வாங்கி வைத்து கொண்டு, பட்டா மாற்றம் சம்மந்தமான விண்ணப்பம் அவரது login–க்கு வந்துள்ளதாகவும், ஆவணங்களை பரிசீலனை செய்துவிட்டு கூறுவதாக சொல்லி அனுப்பிவிட்டார். அதன் பிறகும் எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யாமல் இருந்ததால் நான் 14.08.2025 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு மீண்டும் வாக்கூர் VAO அலுவலகத்திற்கு சென்றேன். அலுவலகத்தில் VAO சதீஷ்குமார் மற்றும் கிராம உதவியாளர் ரமேஷ் ஆகியோர்கள் இருந்தனர். நான் VAO சதீஷ்குமார் அவர்களிடம், பட்டா பெயர்

19/08/2025

மாற்றம் சம்மந்தமாக கேட்டேன். அப்போது VAO சதீஷ்குமார், என்னிடம், எனது அண்ணன் அருள்பிரகாசத்திற்கும், எனக்கும் பட்டா மாற்றம் செய்து கொடுக்க தலா ரூ.5,000/– என மொத்தம் ரூ.10,000/– கொடுக்குமாறும் கேட்டார். அதற்கு நான் பட்டா பெயர் மாற்றம் செய்ய பத்திர பதிவு செய்யும் போதே அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திவிட்டோம் என சொன்னேன். அதற்கு VAO சதீஷ்குமார், நீங்கள் பத்திர பதிவு அலுவலகத்தில் செலுத்தியது அரசுக்கு. நான் கேட்கும் பணம் எனக்கு சேர வேண்டியது என சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை, இந்த சொத்தே எனது அண்ணன் எங்களுக்கு தானமாக கொடுப்பது, இதற்கு ரூ.10,000/– பணமா என கேட்டேன். அதற்கு VAO சதீஷ்குமார், சரி உங்களுக்காக ஒரு பத்திரத்திற்கு ரூ.3,000/– வீதம் மொத்தம் ரூ.6,000/– கொடுங்கள் என்று கேட்டார். அப்போது உடன் இருந்த கிராம உதவியாளர் ரமேஷ் ஒரு பத்திரத்திற்கு பட்டா மாற்றம் செய்ய ரூ.3,000/–க்கு . குறைவாக யாரும் வாங்குவது இல்லை, நீ கொடுக்கவில்லை என்றால் கூட்டு பட்டாவாக VAO போட்டுவிடுவார். அப்புறம் நீங்கள் தான் அலையவேண்டி வரும் என சொன்னார். அதற்கு நான் அவர்களிடம் என்னுடைய அண்ணன் அருள்பிரகாசத்திடம் கேட்டுவிட்டு வருகிறேன் என கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் வீட்டுக்கு வந்து என்னுடைய அண்ணன் அருள்பிரகாசம் அவர்களிடம் பட்டா மாற்றம் செய்ய VAO சதீஷ்குமார் ரூ.6,000/– பணம் கேட்ட விவரத்தை சொன்னேன். அதற்கு என்னுடைய அண்ணன் அருள்பிரகாசம் லஞ்சம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டாம் என்று சொன்னார். நானும் அவரிடம் எனக்கும் பணம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பம் இல்லை என்றும், இதுதொடர்பாக கடலூர் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க உள்ளதாக தெரிவித்தேன். தொடர்ந்து அரசு விடுமுறை இருந்த காரணத்தாலும், நான் சொந்த வேலையாக வெளியூர் சென்றிருந்த காரணத்தினால் உடனடியாக வந்து புகார் கொடுக்க முடியவில்லை.

14/8/2025

பட்டா பெயர் மாற்றம் செய்ய என்னிடம் ரூ.6,000/– லஞ்சம் கேட்ட VAO சதீஷ்குமார் மற்றும் கிராம உதவியாளர் ரமேஷ் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று 19.08.2025 ஆம் தேதி புகார் மனுவினை கொடுக்கிறேன். அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.6,000/–த்தை கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்.....).

Submitted,

Received the above written complaint on 19.08.2025 at about 07.00 hrs., a quiet and quick verification of the general reputation of the Public Servant complained against was made through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.6/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 19.08.2025 at 09.00 hrs., sd/-xxxxx 19/08/2025 (P.ANBALAGAN), Inspector of Police, V & AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார்மனுவுடன் இனைத்து கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

19/8/2025

(P.ANBALAGAN),
Inspector of Police,
V & AC, Cuddalore.